சிவ பூஜை அலங்காரத்தில்...



நவராத்திரி விழா 9-ஆம் நாளான திங்கள்கிழமை மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் சிவ பூஜை அலங்காரத்தில் எழுந்தருளிய மீனாட்சி அம்மன்.

விஜயதசமி: பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை



மதுரை சிம்மக்கல் வைகையாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஸ்ரீசாரதா வித்யாவனம் மெட்ரிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வித்யாரம்ப நிகழ்வில் குழந்தைகளை அரிசியில் தமிழ் மொழியின் முதல் எழுத்தான 'அ' எழுத பயிற்றுவித்த பெற்றோர்கள்.

மதுரை, அக்.20: விஜயதசமியை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விஜயதசமி தினத்தில் எந்த ஒரு புதிய செயலைத் தொடங்கினாலும் வெற்றி பெறலாம் என்கிற ஐதீகம் நிலவுகிறது. இதேபோல, பள்ளிகளில் குழந்தைகளை சேர்த்தால், அவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர் என்கிற நம்பிக்கையும் உள்ளது.

இந்த நிலையில், மதுரை மாவட்டத்தில் குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் விதமாக அனைத்துப் பள்ளிகளையும் திறக்க வேண்டும் என மாவட்டக் கல்வி அலுவலர் தயாளன் உத்தரவிட்டார். மேலும், இதை மாவட்டக் கல்வி அலுவலர்கள், தொடக்கப் பள்ளிகளின் கல்வி அலுவலர்கள் கண்காணிக்கவும் அறிவுறுத்தினார்.

இதையடுத்து, மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது. இதில், பெற்றோர்கள் ஏராளமானோர் தங்களது குழந்தைகளை பள்ளியில் சேர்த்தனர். தொடக்கமாக, வித்யாரம்ப நிகழ்வாக குழந்தைகள் அரிசியில் தமிழ் எழுத்துகளை எழுதினர்.

சிம்மக்கல் அருகே வைகையாற்றின் தென்கரையில் உள்ள ஸ்ரீ சாரதா வித்யாவனம் மெட்ரிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வித்யாரம்பம் (எழுத்து அறிவித்தல்) நிகழ்ச்சியில் மதுரை ராமகிருஷ்ண மடத்தின் சுவாமி தயாசாகரானந்தா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

பின்னர், பெற்றோர்கள் குழந்தைகளை தங்களது மடியில் அமர்த்தி வைத்து நெல், அரிசியில் தமிழ் மொழியின் முதல் எழுத்து 'அ', பிரவண எழுத்தான 'ஓம்' எழுத வைத்து கல்வியைத் தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் இந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கத்தின் மாநில அமைப்புச் செயலர் கிருஷ்ணராஜ், மாநிலப் பொருளாளர் ஆதி சேஷன், மாவட்ட பொதுச் செயலர் குமார், மாவட்ட துணைத் தலைவர் வாசுதேவன், மாவட்டப் பொருளாளர் கோபால், மாவட்டச் செயலர் செல்வி ஸ்ரீனிவாசன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

பைக் மீது கார் மோதியதில் மேலும் ஒருவர் உயிரிழப்பு



உயிரிழந்த ஹரிணி

நத்தம், அக். 20: நத்தத்தில் இரு சக்கர வாகனம் மீது கார் மோதியதில் தம்பதி ஏற்கெனவே உயிரிழந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர்களது மகள் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள நல்லூரைச் சேர்ந்தவர் செந்தில்வேல் (55). கோட்டையூர் ஊராட்சி செயலரான இவர், தனது மனைவி மதிவதனி (45), மகள் ஹரிணி (16) ஆகியோருடன் கடந்த 17-ஆம் தேதி இரவு உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிக்காக நத்தம் வந்தார். பின்னர், நிகழ்ச்சி முடித்துவிட்டு, இவர்கள் வீட்டுக்கு செல்வதற்காக நத்தம்-செந்துறை சாலையை இரு சக்கர வாகனத்தில் கடப்பதற்காக நின்றிருந்தார்.

அப்போது, சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்த சேவுகப் பெருமாள் (32) ஓட்டி வந்த கார் இவர்கள் மீது மோதியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே செந்தில்வேல், இவரது மனைவி மதிவதனி ஆகியோர் உயிழந்தனர். பலத்த காயமடைந்த ஹரிணி மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் செவ்வாய்க்கிழமை உயிழந்தார்.

இதுகுறித்து நத்தம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

பழனி கோயிலில் ரோப்கார் பழுது: பக்தர்கள் அவதி

பழனி, அக். 20: பழனி கோயிலில் ரோப்கார் பழுது காரணமாக செவ்வாய்க்கிழமை நிறுத்தப்பட்டது. இதனால், பக்தர்கள் அவதிக்குள்ளாகினர்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக படிப்பாதைக்கு மாற்றாக ரோப்கார், மின் இழுவை ரயில் சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், குழந்தைகளுடன் வரும் பெண்கள் என பலரும் இந்த ரோப்கார் சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பழுது காரணமாக ரோப் கார் சேவை நிறுத்தப்பட்டது. இதையடுத்து, பக்தர்கள் மின் இழுவை ரயில் சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. ரோப்கார் பழுது காரணமாக பக்தர்கள் அவதிக்குள்ளாகினர். இதைத் தொடர்ந்து, பழுது சரி செய்யப்பட்ட பிறகே ரோப்கார் இயக்கப்படும் என கோயில் நிர்வாகம் தேதி குறிப்பிடாமல் அறிவித்தது.

வருடாந்திரப் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்து கடந்த மாதம் 22-ஆம் தேதி ரோப்கார் சேவை தொடங்கப்பட்ட நிலையில், ஒரு மாதத்துக்குள் மீண்டும் பழுது காரணமாக நிறுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருப்பரங்குன்றத்தில் அம்பு போடும் நிகழ்ச்சி



திருப்பரங்குன்றத்தில் அம்பு போடும் நிகழ்ச்சிக்கு வெள்ளி வில், அம்புடன் தங்கக் குதிரை வாகனத்தில் செவ்வாய்க்கிழமை புறப்பாடான சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்மன்.

திருப்பரங்குன்றம், அக்.20: திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயிலில் நவராத்திரி உத்ஸவத்தின் 10-ஆம் நாள் விழாவில் செவ்வாய்க்கிழமை அம்பு போடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருப்பரங்குன்றம் கோயிலில் நவராத்திரி விழா கடந்த 11-ஆம் தேதி தொடங்கியது. இதையொட்டி, கோயில் கம்பத்தடி மண்டபம் அருகே உள்ள விசாகக் கொறடு மண்டபத்தில் ராஜராஜேஸ்வரி, ஊஞ்சல், தபசுக் காட்சி உள்ளிட்ட பல்வேறு அலங்காரத்தில் கோவர்தனாம் பிகை அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

விழாவின் 10-ஆம் நாளான செவ்வாய்க்கிழமை சுவாமி அம்பு போடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதை முன்னிட்டு, சுப்பிரமணிய சுவாமி, தெய்வானையுடன் மாலை 6 மணிக்கு சர்வ அலங்காரத்தில் தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி பசுமலையில் உள்ள அம்பு போடும் மண்டபத்தில் எழுந்தருளினார். அங்கு யாகம் வளர்க்கப்பட்டு விக்னேஸ்வர பூஜை, புண்ணியாவாசனம், பாசுபதஸ்திர ஹோமம் உள்ளிட்ட பூஜைகள் செய்யப்பட்டு, வன்னி மரத்தடியில் பால், எண்ணெய் உள்ளிட்ட அபிஷேகங்கள் நடைபெற்றன.

இதையடுத்து, எட்டுத்திக்கும் பலி கொடுக்கப்பட்டு, சுப்பிரமணிய சுவாமி பாதத்தில் வெள்ளி வில், அம்பு வைக்கப்பட்டு நான்கு திசைகள் மட்டுமன்றி, மேல்நோக்கியும் அம்பு போடப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். வழி நெடுகிலும் சுவாமிக்கு திருக்கண் அமைத்து பக்தர்கள் வழிபட்டனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் துணை ஆணையர் செல்வி, கோயில் பணியாளர்கள் செய்தனர்.

அம்பு விடுதல் அலங்காரத்தில்...



திருமங்கலம் மீனாட்சி சொக்கநாதர் கோயிலில் நவராத்திரி விழாவின் நிறைவு நாளான (10-ஆம் நாள்) செவ்வாய்க்கிழமை அம்பு விடுதல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த சந்திரசேகரசுவாமி.

அடிப்படை வசதிகள் இல்லாத திருப்பரங்குன்றம் காய்கறிச் சந்தை

நமது நிருபர்



மேற்கூரை சேதமடைந்த நிலையில் உள்ள திருப்பரங்குன்றம் காய்கறிச்சந்தை. (வலது) வாகன நிறுத்தும் இடமாக மாறிய திருப்பரங்குன்றம் பேருந்து நிலையம்.

திருப்பரங்குன்றம், அக். 20: திருப்பரங்குன்றம் காய்கறிச் சந்தையில் குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாத தால் வியாபாரிகள், பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

திருப்பரங்குன்றம் நகர் பகுதி, ஹார்விபட்டி, திருநகர், பசுமலை உள்ளிட்ட பகுதி மக்களுக்காக சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது திருப்பரங்குன்றம் காய்கறிச் சந்தை. நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்லும் இந்தச் சந்தையில் 125 கடைகள் உள்ளன.

இந்தச் சந்தை வளாகத்தில் குடிநீர், கழிப்பறை வசதிகள் முழுமையாகச் செய்து தரப்படவில்லை எனப் புகார் எழுந்துள்ளது. மேலும், சந்தையின் மேற்கூரை சேதமடைந்து பல ஆண்டுகளாகியும் மாற்றப்படாமல் உள்ளது. இதனால், மழைக் காலங்களில் வியாபாரம் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது.

சந்தை கடைகளுக்கு மாநகராட்சி நிர்வாகம் தினசரி வாடகையாக ரூ. 20 வசூலித்த போதிலும், இதற்கேற்ப எந்தவித வசதிகளும் செய்து தரப்படவில்லை என வியாபாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். மேலும், இந்தப் பகுதியில் பாம்பு உள்ளிட்ட விஷ பூச்சிகளின் நடமாட்டமும் அதிகரித்து அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்பு சந்தைக்கு அருகிலேயே பேருந்து நிலையம் செயல்பட்டு வந்ததால் கிராமப்புறங்களில் இருந்தும், உசிலம்பட்டி, திருமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் விவசாயிகள், பொதுமக்கள் எளிதில் வந்து சென்றனர். தற்போது பேருந்து நிலையம் செயல்படாததால் பொதுமக்கள், வாடிக்கையாளர்களின் வருகை முற்றிலுமாக குறைந்துவிட்டது. இதனால், வெளியூர்களில் இருந்து காய்கறிகளைக் கொண்டுவரும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வியாபாரிகள் பல முறை புகார் அளித்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மாநகராட்சி நிர்வாகம் காய்கறிச் சந்தையில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, இந்தப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், வியாபாரிகள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:

காய்கறிச் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லை என பல ஆண்டுகளாக அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு காய்கறிச் சந்தையை அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல்குமார், மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்டோர் நேரில் ஆய்வு செய்தனர். இருப்பினும் இதுவரை எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்றனர் அவர்கள்.

வைகையாற்றுக்குள் கார்கள்: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



மதுரை வைகையாற்றுக்குள் திங்கள்கிழமை நிறுத்தப்பட்டிருந்த கார்கள்.

மதுரை, அக். 20: மதுரை வைகையாற்றுக்குள் கார்களை நிறுத்தியவர்கள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்களவை உறுப்பினர் சு. வெங்கடேசன் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும் வைகையாற்றுப் பகுதிக்கு கதவுகளும், பூட்டுகளும் உண்டு. இந்தப் பூட்டுகளுக்கான சாவிகள் மாநகராட்சி, காவல் துறை, பொதுப் பணித் துறை என 3 துறைகளின் வசம் மட்டுமே இருக்கும்.

இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இந்தக் கதவுகள் திறக்கப்பட்டு, பல கார்கள் வைகையாற்றில் நிறுத்தப்பட்டன. இதனால், அறிவிக்கப்படாத கார் நிறுத்துமிடம் போல வைகை காணப்பட்டது. இதுகுறித்து மாநகராட்சி ஆணையரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து, ஆற்றில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் அப்புறப்படுத்தப்பட்டன. இருப்பினும், திங்கள்கிழமை காலையும் வைகையாற்றில் கார்கள் நிறுத்தப்பட்டன.

எனவே, வைகையாற்றை கார்கள் நிறுத்துமிடமாகப் பயன்படுத்தியவர்கள் மீதும், இதற்கு துணையாகச் செயல்பட்ட அலுவலர்கள் மீதும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

மனைவியைக் கத்தியால் குத்திய கணவர் கைது

பழனி, அக். 20: திண்டுக்கல் மாவட்டம், பழனியில் மனைவியைக் கத்தியால் குத்திய கணவரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

பழனி அருகேயுள்ள பாப்பம்பட்டியைச் சேர்ந்தவர் பிரவீன்குமார்(32). இவரது மனைவி பகவதி(28). இவர்களுக்குள் அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இருவரும் பழனிக்கு பொருள்கள் வாங்குவதற்காக வந்தனர். அப்போது, பேருந்து நிலையம் சுற்றுவட்டச்சாலை அருகே இருவருக்கும்வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, பிரவீன்குமார் மறைத்து வைத்திருந்த கத்தியால் மனைவி பகவதியைக் குத்தினார். இதில் பலத்த காயமடைந்த பகவதி பழனி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து பழனி நகர போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பிரவீன்குமாரைக் கைது செய்தனர்.

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன்: 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ஒருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை பறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் பின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நோம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
ஆறுமுகம் S ஜெயந்தி A இருவரும் வசிக்கும் இடம்: 4/98செங்கமலப்பட்டி, திருத்தங்கல்சிவகாசி, ஆலமரத்துப்பட்டி, திருத்தங்கல், தமிழ்நாடு, 626130	விருதுநகர் பதிவு மாவட்டம், சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வாடி கிராமத்தில், நத்தம் சர்வே எண்.35/2, தற்போது புதிய நத்தம் சர்வே எண்.164/33-ல் அமைந்துள்ள 800 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.5,38,000/- ரூ.53,800/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 7000096303571 19.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.5,95,157/- மேலும் 20.08.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.7,82,578/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அய்யப்பன் M 9003761275, செந்தில்குமார்.R 9524547033				
திரு சுந்தராராஜ் V C/O திரு வெள்ளைசாமி, திருமுதி முருகவட்சுமி S, C/O திரு சுந்தராராஜ். இருவரும் வசிக்கும் இடம்: எண் 60 B GST சாலை, திருப்பரங்குன்றம், மதுரை, தமிழ்நாடு, 625005	மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், மேலநெடுங்குளம் கிராமம், சக்திகணபதி தெரு, "பாம்பன் நகர்"-ல், மனை எண்.10 (தெற்குப் பகுதி), சர்வே எண்கள் 1/1 மற்றும் 1/37-ல் அமைந்துள்ள 520 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.4,41,000/- ரூ.44,100/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETIRNR0418881 23.08.2024 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.4,99,856/- மேலும் 24.08.2024 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.7,77,095/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அதர்ஷ் ராஜ் 9530034555, செந்தில்குமார்.R 9524547033				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

WANTED
M.B.B.S., RMO., IN TIRUNELVELI
Contact No : 8508329137

CHANGE OF NAME
My Son, N.Periyandavar Jhibu, Son of Thiru. V.Nagarajan, Born on 20th October 2004 (Native District : Theni), residing at No. 1/26, Keezha Odai Theru, Andipatti, Theni - 625 512, shall henceforth be known as **N. JIBHU.**
N.CHITRA
(Mother)
Theni,
11th June 2018.

41-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



6-2-15 — 21-10-85

திரு.ப.கா.வேலுச்சாமி பிள்ளை
என்றும் தங்கள் நினைவில் வாழும்
மகன்கள் :
வே. பாலசுப்பிரமணியன்
வே. ஆறுமுகம் மற்றும் குடும்பத்தினர்.
ஸ்ரீ பாலசுப்பிரமணியம் பஸ்-லாரி சர்வீஸ்
ஸ்ரீ வேலுச்சாமி பில்லிங் ஸ்டேஷன், I.O.C., B.L.S. லாட்ஜ், சிவகங்கை.
செந்தில் ஆட்டோ ஸ்டோர்ஸ், மதுரை.
வேலு ஆட்டோ ஏஜென்ஸீஸ், மதுரை.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com